# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1854 - 2014 මාර්තු මස 14 වැනි සිකුරාදා - 2014.03.14

*1854 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 316 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 317 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 320 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மார்ச்சு மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கை புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல் : SRS/F. 7116

*இலங்கை புகையிரத சேவைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் பெறுகைகளை பரீட்சிப்பதற்காக பரிசோதகர்களை நியமித்தல்*

இலங்கைப் புகையிரத சேவைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் பெறுகைகளை பரீட்சிக்கும் பரிசோதகர்களை நியமனஞ் செய்வதற்காக புகழ் வாய்ந்த நிறுவனங்களிலிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தவிசாளர் பெற்றுக்கொள்வார்.

2. விலைமனுக்கள், இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இருந்து அல்லது வெளிநாடுகளில் உள்ள தூதுராலயங்கள் மூலமாக பெறப்படும் படிவங்களில் (2014.04.01 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணி வரைக்கும் இலங்கை நேரம்), மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான ரூ. 2,500 மட்டும் அல்லது இதற்கு சமமான இலகுவில் மாற்றக்கூடிய வெளிநாட்டு நாணயத்தினை, செலுத்தியதன் பயனாக விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. விலைமனுக்கள் 2014.04.02 ஆந் திகதி (இலங்கை நேரம்) பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

4. விலைமனுக்கள் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே அவைகள் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் தலைமையக அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகார அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள், விலைமனுக்களைத் திறக்கும்பொழுது சமுகமளிக்கும்படியாக கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் :-

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத சேவைகள் தலைமையக அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சிய அறைகள் அத்தியட்சகர்,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 2438078 அல்லது 2473328
தொலைநகல் : 2432044

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F.116

3-337

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : லாப் லைப்கெயார் (பிறைவேட்) லிமிடெட்
கூட்டிணைப்பு செய்த திகதி : 2014.01.03
பதிவிலக்கம் : பீவீ 96353
பதிவு முகவரி : இல. 14, ஆர். ஏ. டி மெல் மாவத்தை. கொழும்பு 04.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கீர்த்திபதிராஜா, சட்டத்தரணி
கம்பனி செயலாளர்.

3-260

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் நாம் அறிவிக்கின்றோம்.

கம்பனியின் முன்னைய பெயர் : டெல்லெப் இன்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிடெட்
பதிவிலக்கம் : பீவீ 81740
பதிவு முகவரி : இல. 327, கடவத்தை வீதி, றாகமை

கம்பனி செயலாளர்.

3-295

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : லாப்ஹ்ஸ் டேர்ம்னல் லிமிடெட்
பதிவிலக்கம் : பீவீ 5156
கூட்டிணைப்பு செய்த திகதி : 2013.12.05
பதிவு முகவரி : இல. 14, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கீர்த்திபதிராஜா, சட்டத்தரணி
கம்பனி செயலாளர்.

3-261

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவுக்கேற்ப புட்வேர்க் இன்டர்நஷனல் டான்ஸ் ஒர்கனைசேஷன் (பிறைவேட்) லிமிடெட் 2014, பெப்புருவரி 24 ஆந் திகதி கூட்டிணைக் கப்பட்டது பற்றிய பொது அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது.

கம்பனியின் பெயர் : புட்வேர்க் இன்டர்நஷனல் டான்ஸ் ஒர்கனைசேஷன் (பிறைவேட்) லிமிடெட்
கூட்டிணைப்பு செய்த திகதி : 2014.02.24
பதிவிலக்கம் : பீவீ 97223
பதிவு முகவரி : இல. 956/5 A3, ரோயல் காடின்ஸ், ராஜகிரிய.

பணிப்பளர் சபையின் கட்டளைப்படி

கம்பனி செயலாளர்.

3-351

---

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டு கம்பனிகள் சட்டத்தின் கீழ் 242(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்றிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் கம்பனிச் சட்ட இலக்கம் 7 ஆம் பிரிவு 242 (2) நிபந்தனைகளுக்கு அமைவான ஒன்றிணைப்புப்படி எல்ஓஎல்சி (LOLC) சேர்விசஸ் (பிறைவேட்) லிமிடெட், பிபி 3821 (LOSL) மற்றும் மைக்ரோ இன்வெஸ்ட்மென்ட் (முதலீடுகள்) லிமிடெட் - பிபி 4686 எல்ஓஎம்ஜ (LOMI) சபைகளின் அத்தியட்சகர்களால் எல்ஓஎஸ்எல் (LOSL) வுடன் எல்ஓஎம்ஜ (LOMI) ஒன்றிணைக்க தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனைகளுக்கு அமைவான ஒன்றிணைப்புபடி எல்லா எல்ஓஎஸ்எல் (LOSL) பங்குகள் ஒருவித கொடுப்பனவுகள் அல்லது வேறு சலுகைகள் இல்லாமல் இரத்து செய்து மற்றும் "எல்ஓஎஸ்எல்" உடைய (LOSL) எல்லா சொத்துக்கள் கடன்கள் என்பவற்றை எல்ஓஎம்ஜ (LOMI) சுவீகரிக்கும்.

LOMI தொடர்ந்து நிர்வகிக்கும் கம்பனியாக ஆதிக்கம் செலுத்தும். தற்போதைய LOMI அத்தியட்சகர்கள் ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியினை நிர்வகிப்பார்கள்.

அத்தியட்சகர்கள் சபையின் கட்டளைப்படி,

(செல்வி) கிரிசாந்தி இமானுவேல்,
கம்பனிச் செயலாளர்.

2014, மாசி 11.

3-308

## பொது அறிவித்தல்

வ/ப பொறுப்புள்ள தனியார் கம்பனியொன்றின் கூட்டிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனியின் பெயர் பின்வருமாறு கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : எச்என்பீ. ஜெனெரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீபி 5167
கூட்டிணைப்புத் திகதி : 2014.01.30
பதிவு முகவரி : இல. 479, டி. பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஷிரோமி ஷர்மேயின், ஹலோலுவ,
செயலாளர்.

3-306

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : பைனஸ்ட் சொப்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 97073
பதிவு செய்யப்பட்ட விலாசம் : இல. 270/1G, கெரவலபிட்டிய, ஹுதல, யத்தல.

கம்பனிச் செயலாளர்.

3-266

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : துரேக்ஷா இறப்பர் இன்டஸ்டிரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 97070
கூட்டிணைப்புத் திகதி : 2014.02.17
பதிவு முகவரி : இல. 66/6, யக்கல வீதி, பண்டாரவத்த, கம்பஹா .

கம்பனிப் பணிப்பாளர்

3-270

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : ஏசியா குறூப் என்ட் ரெவ்ஸியோ அட்வர்டைஸிங் (பீவீடீ) எல்டீடி
கம்பனியின் இலக்கம் : பீவீ 96732
கூட்டிணைப்புத் திகதி : 2014.01.28
பதிவு முகவரி : இல. 408C, ஹைலெவல் வீதி, பன்னிப்பிட்டிய.

ஆர். எஸ். போமலுவகே,
கம்பனிப் பணிப்பாளர்.

2014.02.17.

3-271

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : க்விக் டோட்டல் ஒடோ சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 83641
கூட்டிணைப்புத் திகதி : 2012.01.11
பதிவு முகவரி : இல. 3C,/106, மத்தேகொட, மத்தேகொட.

செயலாளர்.

3-346

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது மரீஸ்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் 2013 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : மரீஸ்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 96044
பதிவு முகவரி : இல. 17/12, ஏர்னெஸ்ட் பிளேஸ், லுணாவ, மொறட்டுவை.

டீஸ் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ் மற்றும் செக்கரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்.

3-290/1

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது பிரொட்சன் (பிறைவேட்) லிமிட்டெட் 13 ஆந் திகதி மார்கழி மாதம் 2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : பிரொட்சன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 95996
பதிவு முகவரி : இல. 144/2 - 3, 1 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு 11.

டீஸ் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட் மற்றும்
செக்கரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்.

3-290/2

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தருகிறோம்.

கம்பனியின் பெயர் : சதர்ன் லங்கா இன்வெஸ்ட்மன்ட் என்ட் மெனேஜ்மன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 97148
பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி : இல. 115 ஏ/1, தலப்பத்பிடிய ரோட், உடஹமுல்ல, நுகேகொடை
கூட்டிணைப்புத் திகதி : 2014, பெப்புருவரி 20.

சபையின் கட்டளைப்படி,

பிஸ்னஸ் சொலுஷன்ஸ் அன்ட் செக்கிரடரிஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

3-307/1

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தருகிறோம்.

கம்பனியின் பெயர் : பி என்ட் டபிள்யூ டிரேடிங் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 97114
பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி : இல. 72/70, சனி குணவர்தன மாவத்தை, கெனல் ரோட், ஹெந்தல, வத்தளை.
கூட்டிணைப்புத் திகதி : 2014, பெப்புருவரி 19.

சபையின் கட்டளைப்படி,

பிஸ்னஸ் சொலுஷன்ஸ் அன்ட் செக்கிரடரிஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

3-307/2

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தருகிறோம்.

கம்பனியின் பெயர் : டிசைன் ரிபப்ளிக் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 97113
பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி : இல. 78, ஸ்ட்ரெட் போட் எவன்யு, கொழும்பு 6
கூட்டிணைப்புத் திகதி : 2014, பெப்புருவரி 19

சபையின் கட்டளைப்படி,

பிஸ்னஸ் சொலுஷன்ஸ் அன்ட் செக்கிரடரிஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

3-307/3

## பங்குதாரரின் சுயவிருப்பத்தின் பேரில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 331 (2) பிரிவின் கீழ் ஒடுக்கப்படும் லீலா ஹாட்வெயார் பிறைவேட் லிமிட்டெட் (பீவீ 7648) இறுதி ஒடுக்கப்படுனர் கூட்டம்.

இத்தால் சகலரும் அறிவது யாதெனில், 2014, பங்குனி மாதம் 27 ஆந் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு மேற்படி கூட்டம் இலக்கம் 2A, 1/1, ரஞ்சன் வீதி, புகையிரத வீதி உட்புறமாக, கொழும்பு 06, இந்தக் கூட்டத்தில் ஒழித்துக்கட்டுநர் ஒழித்துக் கட்டுதல் தொடர்பான கணக்கு விபரங்களை சமர்ப்பிப்பார். மேலும் இது சம்பந்தப்பட்ட தேவையான தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளது.

அங்கத்தவர்களால் நேரடியாக சமுகமளிக்க முடியாவிடின் வேறு யாரையேனும் தங்களுக்கு பதிலாக நியமிக்க முடியும் அப்படி நியமிக்கப்படுபவர் கம்பனியின் அங்கத்தவராக இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

ஒழித்துக் கட்டுநர்,

ச. பூ. கஜேன்டிரா,
2014, பெப்புருவரி 24.

3-289

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கல்குடா, வாழைச்சேனை வீதியைச் சேர்ந்த திரு. அமரசிங்கம் அருள் புனிதா வளராஜன் மற்றும் திருமதி எலிசபெத் பிரபாஜினி ஆகிய நாங்களிருவரும் ஓட்டமாவடி பிரசித்த நொத்தாரிசு எம். பீ. எம். ஹுசைன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 9186 என்ற இலக்கமும் 2013.06.23 ஆந் திகதியிடப்பட்டதும் கல்குடா, வாழைச்சேனை, 281 ஆம் இலக்கத்தைச் சார்ந்த திரு. ரீ. கே. விக்டர்

ஜெயரூபன் என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றோம்.

அமரசிங்கம் அருள் புனிதா வளராஜன்
மற்றும் திருமதி எலிசபெத் பிரபாஜினி.

3-268

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹிக்கடுவை, காலி வீதி, இல 317 கொண்ட இடத்தில் வதியும் குணசிங்ஹ கித்சிரி ஹேமால் டயஸ் ஆகிய நான், எச். எச். நந்தன மல்குமார, பகிரங்க நொத்தாரிசினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 610 மற்றும் 2013.12.01 ஆந் திகதியுடைய அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதெனவும் இதன் பின்னர் கூறப்பட்ட அற்றோர்ணி தத்துவத்தின் கீழ் பிலியந்தலை, மொரட்டுவை வீதியில் இல. 150 கொண்ட இடத்தில் வதியும் கொலுஹேவாகே பிரசாத் றுவன் நிசேன்திர த சில்வாவினால் செய்யப்படும் எந்தவொரு நடவடிக்கை களுக்கும் நான் வகை கூறமாட்டேன் என பொது மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

குணசிங்ஹ கித்சிரி ஹேமால் டயஸ்.

3-344

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்தினபுரி, கெடங்கம, இல. 235 இல் வசிக்கும் லங்காஹலுகே கமலாவதி (தேசிய அடையாள அட்டை இல. : 566991934V) ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு பி. எல். அபேரத்ன அவர்களினால் 2002.02.05 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3396 ஆம் இலக்கமிடப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தினை இரத்தினபுரி, கெடங்கம, இல. 235 இல் வசிக்கும் ரொஹான் டயஸ் ஸ்டீவன் என்பவருக்கு அளிக்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இன்று 2014.01.25 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதுடன், அதை செல்லுபடியற்றதாக்கி விட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிப்பதுடன் இதன் பின் ரொஹான் டயஸ் ஸ்டீவன் அவர்களால் செய்யப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

லங்காஹலுகே கமலாவதி

3-296

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 36, பார்க் வீதி, ராஜகிரியவில் குடியிருக்கும் நாணயக்கார பாண்டிக் கோராலலாகே லக்ஷ்மன் நாணயக்கார ஆகிய நான் கொழும்பு 10, மருதானை, 2 ஆவது ஒழுங்கை, ஸ்ரீ சுகதவன்ச மாவத்தை, இல. 5/2 இல் குடியிருக்கும் நாமல் ஜீவானன்த டி சில்வா என்பவருக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எப். எம். ஏ. எல். சி. முஹன்திரம்கே அவர்களால் 2010.09.02 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 022 என்ற விசேட அற்றோணி தத்தவப் பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இங்கு குறிப்பிடப்படும் திகதியில் இரத்துச் செய்வதுடன் அது தொடர்பான எதுவித பொறுப்புகளுக்கும் காணி உறுதிகளுக்கும், வங்கி விடயங்களுக்கும் செயலில் இல்லை என்றும் நான் இதன் பின் மேற்படி நபரால் எனது சார்பாக புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும், அதன் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவித்தல் தருகின்றேன்.

நாணயக்கார பாண்டிக் கோராலலாகே
லக்ஷ்மன் நாணயக்கார.

3-354

---

## ஏல விற்பனைகள்

**டீஎப்சீசீ வங்கி**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு

(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***1577 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

***கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், உஹண பிரதேச செயலாளர் பிரிவு, வவுகம்பற்று வடக்கு, உஹண கிராமத்தில் அமைந்துள்ள, கொட்டகமவத்த மற்றும் சியம்பலாகஹவத்த எனவும் ஜீலியாட் வளவு எனவும் அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. அமரதேவ அவர்களால் வரையப்பட்ட 2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதியிடப்பட்ட 837 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 03 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 38.8பே.)***

*(அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக அம்பாறை காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது.)*

***கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், உஹண பிரதேச செயலாளர் பிரிவு, வவுகம்பற்று வடக்கு, உஹண கிராமத்தில் அமைந்துள்ள, கொட்டகமவத்த மற்றும் சியம்பலாகஹவத்த எனவும் ஜீலியாட் வளவு எனவும் அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. அமரதேவ அவர்களால் வரையப்பட்ட 2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதியிடப்பட்ட 837 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 05 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 04.4பே.)***

*(அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக அம்பாறை காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது.)*

**1578 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்.**

**கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், வவுகம்பற்று, மெதபலாத்த கோரளே உஹணயில் அமைந்துள்ள, கொட்டகமவத்த மற்றும் சியம்பலாகஹவத்த எனவும் ஜீலியாட் வளவு எனவும் அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. அமரதேவ அவர்களால் வரையப்பட்ட 2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதியிடப்பட்ட 837 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 06 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு. அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 14.3பே.)**

**1579 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்.**

**கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், உஹண பிரிவு, வவுகம்பற்று கோரளை, உஹணயில் அமைந்துள்ள பிரிக்கப்பட்ட காணித்துண்டு. அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 30பே.)**

மேலே சொல்லப்பட்ட சொத்தானது, அளவையியல் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட 1999 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 23 ஆந்திகதியிடப்பட்ட உஹண நகரின் கடெஸ்டல் வரைபடத்தில் 280014 (பக்கம் 01) இல் ரொட்டுவளவு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(காணியின் விஸ்தீரணம் : 0.1897 ஹெக்டயார்)**

மேலே கூறப்பட்ட சொத்தானது 1/2 வரைபடத்தில் துண்டு 143 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதுளை பிரசித்த நொத்தாரிசு எச். எம். சீ. சீ, ஹென்னாயக்க மெனிக்கே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதியிடப்பட்ட 1577, 1578 மற்றும் 1579 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம், உஹணயில் விசாகா ரெஸ்டூரன்ட் எனும் பெயரில் வியாபாரத்தை முன்னெடுத்து வரும் உஹணயைச் சேர்ந்த ஹீனெட்டிகல கனத்தகே ரஞ்ஜித் பிரேமலால் என்பவரால் டீஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து, டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்);

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 1,20,000 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
122 வருடகால மகோன்னத சேவையைக் கொண்டாடும்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

3-317

---

**சம்பத் வங்கி பீ எல் சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

மாரி டி க்லெசிக் எட்டாய(ர்) பிறைவேட் லிமிட்டெட் - கணக்கு இல. 0001 1004 5522 மற்றும் 5999 0000 0684

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 26.08.2010 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.10.29 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2010.10.26 ஆந் திகதிய "திவயின", "ஜலன்ட்", "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, நாற்பது இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்தொன்பது ரூபா தொண்ணூற்று ஆறு சதம் (ரூ. 40,82,829.96) 2010, மார்ச்

03 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை இருபத்தொரு இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து எழுநூற்று நாற்பத்தேழு ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 21,83,747.48) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்திரண்டு வீதம் (22%), மேலும் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்தைந்து ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 2,99,835.61) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினொரு வீதம் (11%) மேலும் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் தொண்ணூற்று ஐயாயிரத்து இருநூற்று எழுபத்தாறு ஐக்கிய அமெரிக்க டொலர் தொண்ணூற்று ஐந்து சதம் (ஐ.அ. டொலர் 95,276.95) மேலும் எண்பத்து நான்காயிரத்து ஐநூற்று எண்பது ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐ.அ. டொலர் 84,580) 2010, மார்ச் 03 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை வருடாந்தம் ஆறு வீதம் (6%) குறைந்த பட்ச வட்டி வீதத்திற்கமைவாக மூன்று மாதங்களுக்கு (3) லண்டன் இண்ட்டன்ட் வங்கி பெற்றுக் கொடுக்கும் வட்டி வீதம் வருடாந்தம் இரண்டுதசம் ஐந்து (2.5%) மீது அறவிடப்படும் வட்டி, வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2014.04.01 ஆந் திகதி மு. ப. 11.30 மணி முதல் ஹோமாகம கலவிலவத்த, சமன் மாவத்தை, 1 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பீட்டு இல. 12/1 இல் மற்றும் மு. ப. 11.45 மணி முதல் ஹோமாகம கலவிலவத்த, சமன் மாவத்தை, 1 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பீட்டு இல. 13/1 இல் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளையின் பல்லே பத்துவின் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹோமாகமையில் அமைந்த கலவிலவத்த சமன் மாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 5/7 ''கலவிலவத்தை'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ. எல். சேனாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1964, மார்ச்சு 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 2898 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 42 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட் C (20 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்) ; கிழக்கு : லொட் 41 ; தெற்கு : லொட் 23 மற்றும் ; மேற்கு : லொட் 01 (12 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2898 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகம காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G369/67 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளையின் பல்லே பத்துவின் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹோமாகமையில் அமைந்த கலவிலவத்த சமன் மாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 1/12, 1 ஆவது ஒழுங்கை, 5/7, இரண்டாவது ஒழுங்கை ஏற்ற ''கலவிலவத்தை'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, ஒகத்து 07 ஆந் திகதியிடப்பட்ட 1549 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : கலவிலவத்தை 2 ஆவது ஒழுங்கை (இல. 2898 எனும் வரைபடத்தின் லொட் C ; கிழக்கு : இல. 2898 எனும் வரைபடத்தின் லொட்கள் 41 மற்றும் 24 ; தெற்கு : கலவிலவத்தை 1 ஆவது ஒழுங்கை (இல. 2898 எனும் வரைபடத்தின் லொட் B) மற்றும்; மேற்கு : 12 அடிகள் அகல வீதிக்கான (இல. 2898 எனும் வரைபடத்தின் லொட் 01) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1549 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகம காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G1472/164 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளையின் பல்லே பத்துவின் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹோமாகமையில் அமைந்த கலவிலவத்த சமன் மாவத்தையிலிருந்து திரும்பி, 1 ஆவது ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 1/13 "கலவில எஸ்டேட் எனும் கலவிலவத்தை" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, யூன் 26 ஆந் திகதியிடப்பட்ட 2608 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. கே. டி. எஸ். ஜயரத்னவினால் தயாரிக்கப்பட்ட 1995, மே 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 9520 எனும் வரைபடத்தின் லொட் 02 (இல. 2898 எனும் வரைபடத்தின் முதலாவதான பகுதி லொட் 41) ; கிழக்கு : சமன் மாவத்தையிலிருந்து திரும்பி, 1 ஆவது ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 1/4 எனும் வளவின் (இல. 2898 எனும் வரைபடத்தின் லொட் 25); தெற்கு : சமன் மாவத்தையிலிருந்து திரும்பி 1 ஆவது ஒழுங்கை (இல. 2898 எனும் வரைபடத்தின் லொட் 18) ; மற்றும் மேற்கு : சமன் மாவத்தையிலிருந்து திரும்பி 1 ஆவது ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 1/2 எனும் வளவின் (இல. 2898 எனும் வரைபடத்தின் லொட் 23) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2608 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகம காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G1472/163 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3-340/1

**சம்பத் வங்கி பீ எல் சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

எம். எஸ். பெரேரா – கணக்கு இல. 0187 5000 0920

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2013.08.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2013.10.25 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2013.10.10 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, ஐம்பத்துமூன்று இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து ஐநூற்று பதினெட்டு ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 53,42,518.37) 2013, யூன் 28 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை நாற்பத்தெட்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து எழுநூற்று ஏழு ரூபா பதினொரு சதம் (ரூ. 48,42,707.11) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு வீதம் (17%), வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2014.04.02 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பல ஹத்பத்துவையின் யட்டிகாஹா கோரளை பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லைகளுக்குள் கம்புரபொலவில் அமைந்த ''கம்புராபொல எஸ்டேட்'' உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. அத்தபத்து என்பவரால் தயாரித்த 2011, நவெம்பர் 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 280/2011 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கிற்கு : எச். எம். டிக்கிரிபண்டா உரிமம் கோரும் காணி ; கிழக்கிற்கு : கம்புரபொல மஹாவித்தியாலயத்தின் காணி ; தெற்கிற்கு : இல. 681 எனும் வரைபடத்தின் லொட் 2 மற்றும் ; மேற்கிற்கு: குளியாபிட்டி முதல் ஹெட்டிபொல வரையான பிரதான வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் எட்டு பேர்ச்சுக்கள் (0ஏ. 1றூ. 8பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 280/2011 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட இல. 280/2011 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :-

மேற்கூறப்பட்ட கம்புரபொலவில் அமைந்த ''கம்புராபொல எஸ்டேட்'' உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992, செத்தெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 681 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கிற்கு : எச். எம். டிக்கிரிபண்டா உரிமம் கோரும் காணியை பிரிக்கும் கம்பளி வேலி ; கிழக்கிற்கு : கம்புரபொல மஹாவித்தியாலயத்தின் காணியை பிரிக்கும் கம்பி வேலி ; தெற்கிற்கு : இல. 681 எனும் வரைபடத்தின் லொட் 2 மற்றும் ; மேற்கிற்கு : குளியாபிட்டி முதல் ஹெட்டிபொல வரையான பிரதான வீதியைப் பிரிக்கும் கம்பி வேலி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் எட்டு பேர்ச்சுக்கள் (0ஏ. 1றூ. 8பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 681 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாபிட்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் J 99/36 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3-340/2

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 70258293

திரு. பற்றிகிரிகே குணசீல மற்றும் திருமதி பற்றிகிரிகே நிலங்கா நயனஹரி குணசீல ஆகியோரின் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.09.06 ஆந் திகதிய 1827 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2013.08.26 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினமின'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 290, ஹவ்லொக் ரோட், கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. சொக்மன் மற்றும் சமரவிக்ரம 08.04.2014 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை உடுகஹ பற்றுவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுள் வெனிவெல்கொல கிராமத்தில் அமைந்த ''ஈரியகஹ ஓவிட்டயும், கெபல்லகஹ ஓவிட்டயும், நாகனஇன்ன ஓவிட்டயும், எலமாகா ஓவிட்டயும்'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற

நிலஅளவையாளர் சிறிபோபே ஆரச்சி தயாரித்த 2007, நவெம்பர் 22 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 4742 இல் விபரித்த துண்டு X என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கில் : ஏ. கே. கொரனிஸ் சிங்யோ மற்றும் ஏனையோர் டி. வீரக்கொடியும் உரிமை கோரும் காணிகளும் ரோட்டும் வரைபடம் இல. 4352 இல் துண்டு 1 A உம் ; கிழக்கில்: ரோட்டும் (பெருந்தெரு) காலஞ்சென்ற ஜேமிஸ் வீரசிங்ஹவின் வாரிசுகளும் ஏனையோரும் உரிமைகோரும் காணியும் வரைபடம் இல. 4352 இல் துண்டு 1A உம் ; தெற்கில் : காலஞ்சென்ற ஜேமிஸ் வீரசிங்ஹவின் வாரிசுகளும் ஏனையோரும் உரிமைகோரும் காணியும் நெல் வயலில் இருந்து பிரதான வீதி வரை ரோட்டும் ; மேற்கில் : டபிள்யூ. ஏ. ஒபியஸ் மற்றும் ஏனையோரும் டி. வீரக்கொடியும் உரிமை கோரும் காணிகளும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4742 இன்படி ஒரு ஏக்கர் ஒரு றூட் முப்பத்தெட்டு தசம் சைபர் ஏழு பேர்ச் (1ஏ. 1றூ. 38.07பே.) அல்லது சைபர் தசம் ஆறு சைபர் இரண்டுஒன்று ஏழு ஹெக்டேயர்கள் (ஹெக். 0.603217) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந் துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் N 436/ 136 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காணி கீழே விபரித்த காணிகளின் ஒனறிணைப்பு ஆகும்:-

மேற்குறிப்பிட்ட வெனிவல்கொலயில் அமைந்த ''நாகனஇன்ன ஓவிட்டயும், எலமபகாகா ஓவிட்டயும்'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். போபே ஆரச்சி தயாரித்த 2005.10.02 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 4221 இல் விபரித்த துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கில்: காணித்துண்டுகள் 2 உம், டி. வீரக்கொடி உரிமைகோரும் காணியும் ; கிழக்கில்: ஜேமிஸ் வீரக்கொடியின் வாரிசுகளினதும் ஏனையோரினதும் காணியும் ; தெற்கில் : ரோட்டும் ; மேற்கில் : எம். ஏ. ஒபியஸினதும் ஏனையோரினதும் காணிகளும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4221 இன்படி ஒரு ஏக்கர் ஒரு றூட் பத்து தசம் சைபர் ஒன்று பேர்ச் (1ஏ. 1றூ. 10.01பே.) அல்லது சைபர் தசம் ஐந்து மூன்று ஒன்று இரண்டு இரண்டு ஹெக்டேயர்கள் (ஹெக். 0.53122) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் N 138/147 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட வெனிவல்கொலயில் அமைந்த ''ஈரியகஹ ஓவிட்டயும்'' கெவல்லகஹ ஓவிட்டயும் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். போபே ஆரச்சி தயாரித்த 2006.04.15 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 4352 இல் விபரித்த துண்டு 1B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கில் : துண்டு 1A உம் ; கிழக்கில்: ரோட்டும் (பெருந்தெரு) தெற்கில்: வரைபடம் இல. 4221 இல் துண்டு 3 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4221 இன்படி பத்தொன்பது தசம் ஒன்பது சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 19.90பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் N 382/156 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். பீலிபொத,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பிலியந்தலை கிளை.

3-341

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

### மட்டக்களப்பு தாலன்குடாவில் அமைந்துள்ள 03 ஏக்கர் 1 றூட் 20 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள பெறுமதிமிக்க சொத்து

1. கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனைப் பற்றில் தாளன்குடா மண்முனை பகுதி பிரதேச செயலாளர் பிரிவில் தாளன்குடா கிராம அதிகாரி இல. 153 பிரிவில் தாளன்குடா கிராமத்தில் அமைந்துள்ள வரைபடம் பிடி 869 இலக்கங் கொண்ட நகர சபை எல்லைக்குள், காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் 8 ஆம் இலக்க வாட்டில் காத்தான்குடி கிராமத்தில் கர்பல வீதியில் அமைந்துள்ள வரி மதிப்பீட்டிலக்கம் 30 இடப்பட்ட பிபி மட்/118 இல் லொட் 03 இடப்பட்ட பிரித்து வேறாக்கப்பட்ட காணிப் பகுதி.

அங்குள்ள சகல விதமான உரிமைகளும் உள்ளடங்கும். மேலே குறிப்பிடப்பட்ட கட்டிடங்களுக்கு நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள அல்லது இணைக்கப்பட்டுள்ள மற்றும், அல்லது பின்னர் பொருத்தக்கூடிய அல்லது சேர்க்கக்கூடிய சகல அசையாத இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள், பொருத்துவது, சேர்ப்பது மற்றும் சேவைகள் உட்படுவதோடு, நீர் வழங்கும் தொகுதி உபகரணங்கள் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் உபகரணம் மற்றும் அதிகுளிர் சாதனப்பெட்டி என்பவைகளும் உள்ளடங்கும்.

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆந் திகதி மேலே குறிப்பிடப்பட்ட சொத்து பி. ப. 12.15 மணிக்கு சொத்து அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**சொத்துக்கு உள்ளே செல்லும் வழி**.- மட்டக்களப்பு நகரத்தில் (கிழக்கு வைத்தி வளாகச் சந்தி) அருகில் அமைந்துள்ள தாளங்குடி சமுர்த்தி வங்கி வரை புதிய கல்முனை வீதி 10.3 கி. மீற்றர் வரை பிரயாணம் செய்து இடது பக்கம் திரும்பி சிறிய சந்தி வரை அந்தனிஸ் வீதியில் 200 மீற்றர் அளவு பிரயாணம் செய்து மீண்டும் வலது பக்கம் திரும்பி மீண்டும் 350 மீட்டர் வரை பிரயாணம் செய்வதால் இந்தச் சொத்திற்கு அண்மிக்க முடியும்.

2. மட்டக்களப்பு, கருவப்பன் கேணி, புதிய எல்லை வீதியில் அமைந்தள்ள 98/ 2, வரிமதிப்பீட்டிலக்கம் இடப்பட்ட சூழலில் அமைந்துள்ள 0ஏக்கர் 0றூட், 13.76 பரிமாணமுள்ள பெறுமதிமிக்க சொத்து கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் மட்டக்களப்பு மாநகர சபை எல்லைகளினுள் 13 ஆம் பிரிவு கருவப்பன் கேணி 176பி கிராம அதிகாரப் பிரிவினுள் கருவப்பன் கேணி கிராமத்தில் புதிய எல்லை வீதியில் அமைந்துள்ள வரைபட இலக்கம் 2008/ 1216 இடப்பட்ட பிரித்து வேறாக்கப்படட காணித்துண்டு.

அங்குள்ள சகல விதமான உரிமைகளும் உள்ளடங்கும். மேலே குறிப்பிடப்பட்ட கட்டிடங்களுக்கு நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள அல்லது இணைக்கப்பட்டுள்ள மற்றும், அல்லது பின்னர் பொருத்தக்கூடிய அல்லது சேர்க்கக்கூடிய சகல அசையாத இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள், பொருத்துவது, சேர்ப்பது மற்றும் சேவைகள் உட்படுவதோடு, நீர் வழங்கும் தொகுதி உபகரணங்கள் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் உபகரணம் மற்றும் அதிகுளிர் சாதனப்பெட்டி என்பவைகளும் உள்ளடங்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட சொத்து 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆந் திகதி பி. ப. 12.45 மணிக்கு சொத்து அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**சொத்தின் உள்ளே செல்லும் வழி.**- மட்டக்களப்பு பகிரங்க பஸ் தரிப்பிடத்தில் இருந்து திருகோணமலை வீதி, 3 கி. மீற்றர் அளவு கொத்து குலந்தி மாரி அம்மன் கோவில் பிரயாணம் செய்து இடது புறமாக திரும்பி எல்லை வீதியில் 1.2 கி. மீற்றர் அளவில் முன்னால் சென்று வலது பக்கம் திரும்பி வேலாயுதம் ஒழுங்கையில் 25 மீற்றர் அளவு பிரயாணம் செய்து வீதியில் இடதுபக்கம் அமைந்துள்ளது இந்த சொத்து.

3. மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள 82 1/2' x 52 1/2' பரிமாணமுள்ள பெறுமதிமிக்க சொத்து.

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை இருவில்பற்றுவில் பாலன் தோட்டம் என்ற பெயரால் 116ஏ கிராம அதிகாரப் பிரிவினுள் களுவாஞ்சிக்குடி கிராமத்தில் அமைந்துள்ள பட்டிருப்பு தோட்டம் அல்லது ஈஸ்டர்ன் சிடர்ன் பலயா தோட்டம் என்ற பெயரால் அடையாளப்படுத்தப்பட்ட காணியில் பிரித்து வேறாக்கப் பட்ட காணித்துண்டு.

அங்குள்ள சகல விதமான உரிமைகளும் உள்ளடங்கும். மேலே குறிப்பிடப்பட்ட கட்டிடங்களுக்கு நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள அல்லது இணைக்கப்பட்டுள்ள மற்றும், அல்லது பின்னர் பொருத்தக் கூடிய அல்லது சேர்க்கக்கூடிய சகல அசையாத இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள், பொருத்துவது, சேர்ப்பது மற்றும் சேவைகள் உட்படுவதோடு, நீர் வழங்கும் தொகுதி உபகரணங்கள் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் உபகரணம் மற்றும் அதிகுளிர் சாதனப்பெட்டி என்பவைகளும் உள்ளடங்கும்.

2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ஆந் திகதி மேலே குறிப்பிடப்பட்ட சொத்து பி. ப. 1.00 மணிக்கு சொத்து அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**சொத்துக்கு செல்லும் வழி.**- மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து கல்முனை வீதி 30 மீற்றர் அளவு பீபல்ஸ் லீசிங் கம்பனி கட்டிடம் வரை பிரவேசித்து அங்கிருந்து இடது பக்கத்திற்கு திரும்பி சிறிது தூரம் இடது பக்கத்திலுள்ள இரண்டாவது வீதி வரை பிரயாணம் செய்து இந்த வீதியில் வலது பக்கத்தில் அமைந்துள்ள இடமாகும்.

4. மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள பட்டிருப்பு சந்தியில் அமைந்துள்ள அம்பாள் பார்ம் ஹவுஸ் என்ற சூழலில் களஞ்சியப்படுத்தப்பட்டு அல்லது வைத்திருக்கின்ற கடனுக்கு வாங்குபவர்களுடைய வியாபார பொருட்கள் தொகை (Stock in Trade) என அடையாளப்படுத்தப்படுகின்ற சகல உபகரணங்களும் மற்றும் சகல உரத் தொகைகளும்.

மேற் சூழலில் வைக்கப்பட்டுள்ள பூரணமான வியாபாரப் பொருட்கள் தொகை (Stock in Trade) 2014 ஆம் ஆண்டு மார்ச்சு 28 ஆந் திகதி பி. ப. 1.15 மணிக்கு சொத்து அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**சொத்துக்கு செல்லும் வழி.**- மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து கல்முனை வீதி, களுவாஞ்சிக்குடி தள வைத்தியசாலையைத் தாண்டி சில மீற்றர்கள் பிரயாணம் செய்து இந்த வழியில் வலது பக்கத்தில் அமைந்துள்ள இந்த சொத்திற்கு அண்மிக்க முடியும்.

2013 ஆம் ஆண்டு ஓகத்து 12 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 742 இலக்கமிடப்பட்ட அடகு வைக்கப்பட்டதன் கீழ் அறவிடவேண்டிய தொகையை செலுத்துவது சந்திரப்பிள்ளை பிரபாகரன் மற்றும் விஜயமாலினி பிரபாகரன் என்பவர்களினால் (கடனாக எடுத்தாலும்) புறக்கணிக்கப்பட்டுள்ளதனால் மேலே குறிப்பிடப்பட்ட வங்கியின் மூலம் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் மீது மேலே குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் மேலே குறிப்பிடப்பட்டவாறு ஏலமிடப்படும்.

**மேலதிக விபரங்களுக்காக.**- 2014.02.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும், 2014.02.22 ஆந் திகதிய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகை களையும் பார்க்கவும்.

**பணம் செலுத்தும் விதம்.**- சகல ஏலத்தின் முடிவிலும் வெற்றிகரமாக கொள்வனவாளரினால் கீழே குறிப்பிடப்பட்ட தொகையை அதே நேரத்தில் ஏலவிற்பனையாளருக்கு செலுத்தப்பட வேண்டும் : (1) கொள்வனவு விலையின் 10% ; (2) உள்ளூராட்சி சபையின் அறவீடுகள் 1% ; (3) ஏலதாரரின் அறவீடுகள் 2 1/2% ; (4) மொத்த விளம்பரச் செலவுகள்; (5) எழுதுவினைஞரினதும் கூவுவோரினதும் கட்டணம் ரூபா 1,500; (6) விற்பனை நிபந்தனை களுக்கு நொத்தாரிசுவின் அத்தாட்சிப்படுத்தும் கட்டணம் ரூபா 3,000 முதலியன. கொள்வனவு விலையின் மிகுதி 90%, ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

வியாபார பொருட்கள் தொகை ஏலம் செய்யும் சந்தாப்பணத்தில் சகல கொள்வனவாளர்களும் சுத்தியலை கீழே போட்டவுடன், (1) முழு கொள்வனவு தொகை ; (2) உள்ளூரதிகார சபையின் அறவீடுகள் 1%; (3) ஏலதாரரின் அறவீடுகள்2 1/2% ; (4) மொத்த விளம்பரச் செலவுகள்; (5) எழுதுவினைஞரினதும் கூவுவோரினதும் கட்டணம் ரூபா 1,500; (6) விற்பனை நிபந்தனைகளுக்கு நொத்தாரிசுவின் அத்தாட்சிப்படுத்தும் கட்டணம் ரூபா 3,000 முதலியன. ஏலவிற்பனையாளருக்கு செலுத்தப்பட வேண்டும்.

உரித்து உறுதிகளையும் ஏனைய ஆவணங்களையும் பார்வையிடு வதற்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும். "முகாமையாளர் - சட்டம் (அறவீடுகள்) , தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சி, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 2. தொலைபேசி இல.: 2448448, 011-7448448.

பீ. கே. ஈ. சேனாதிபதி,
நீதிமன்ற ஆணையாளரும் பெறுமான மதிப்பீட்டாளரும்
பட்டயம் பெற்ற ஏலவிற்பனையாளரும்.

இல. 134, பத்தேகம வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. :2871184.

3-342

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால்
வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்)
சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**காணித்துண்டு முழுவதும் மீதான குத்தகை உரிமை (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் (கொழும்பு பதிவுப் பிரிவிற்குள்), கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், வட்டார இல. 25, பஞ்சிகாவத்தை, மருதானையில் அமைந்துள்ளதும் ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, வரிமதிப்பு இல. 14 மற்றும் மருதானை வீதி, வரிமதிப்பு இல. 79 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி.**

**டி. சீ. ஹீன்தெனிய அவர்களால் தயாரிக்கப்பட்டு 1998, பெப்புருவரி 15 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1185 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 01 (நிலஅளவையாளர் நாயகத்தினால் உறுதிப்படுத் தப்பட்டு 1981.08.17 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை வரைபடம் இல. சீஓ 5630 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 7 இன் பாகம் மற்றும் துண்டு 1 இலிருந்து துண்டு 6 வரை ஒன்றிணைக்கப்பட்டிருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான காணியினது)**

**கொழும்பு காணிப்பதிவகத்தில் தலைப்பு ஏ 1097/37 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது ;**

**ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 12.08பே)**

*(கடப்பாடுடையவர்களான சஞ்ஜய சேதார செனரத் மற்றும் திருமதி கலாஹே பண்டிகோறளகே அருணி மஞ்சுளா கருணாகொட ஆகியோர், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். எஸ். என். ராஜகருணா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012.02.08 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 4881 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- இவ்வாதனம் மருதானை தொழில்நுட்ப கல்லூரி சந்தியில் அமைந்துள்ளது. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை வழியைப் போன்றே மருதானை வழியேயும் உட்புகலாம்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தின் 70 வருட காலாவதியாகாத குத்தகை உரிமையை 2014, ஏப்பிறல் 4 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2014.02.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், அதே திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் ) ;
(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணங்கள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., சிரேட்ட முகாமையாளர் - சட்ட சம்பந்தமானது" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 011-2565573, 011-2565565.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் பட்டய ஏலதாரர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 077-7672082.
தொலைநகல் இல. : 2871184.

3-352

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – மாத்தளை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**நான்கு மாடி வீட்டுக் கட்டிடம் பகிரங்க ஏல விற்பனை**

**மாத்தளை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மாத்தளை நகரத்தில் கொடபொல பாதையில் அமைந்துள்ள பள்ளியழிவஜியார் வத்த எனும் சியம்பலாகமுவ வெதராலகே வத்த எனும் காணி**

**.1. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. குமாரசாமி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 30.07.1975 ஆந் திகதிய 6031 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட வரிபணம் இல. 22 எனும் காணித்துண்டு மற்றும் அதனுள்ளடங்கும் சகலதுமாகும். இது 3.59 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

**.2. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. சமரசிங்க என்பவரி னால் தயாரிக்கப்பட்ட 21.04.1993 ஆந் திகதிய 1159 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் A எனும் வரிபணம் இல. 20 எனும் காணித்துண்டு மற்றும் அதனுள்ளடங்கும் சகலதுமாகும். இது 3.40 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

**(காணியின் முழுப் பரப்பளவு 6.99 பேர்ச்சஸ் ஆகும்.)**

**ஆதனத்தை வந்தடைதல்.**- மாத்தளை பிரதான வீதியில் இருந்து கொடபொல பாதைக்கு வந்து சுமார் 100 மீற்றர் வரை வந்து இந்த பாதையில் வலது பக்கமாக முகந்திரம் பாதை சந்தி முன் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2014, ஏப்பிறல் 02 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2013.04.26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியையும் 2013.04.30 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம", மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனை யாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதலில் மிகுதி 90% வீதம் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- சிரேஷ்ட முகாமையாளர், (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836, 011-2661826.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. :081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

3-366

---

### கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ – நாவலப்பிட்டி கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**மிகவும் பெறுமதிமிக்க வியாபாரத்திற்கு பொருத்தமான காணி ஏல விற்பனை**

**விக்டோரியா ரேன்ஜ் பங்லோஸ் தொகுதி விடுமுறை இல்லத்திற்கு அல்லது உல்லாச விடுதியொன்றிற்கு பொருத்தமான கண்டி மாவட்டத்தில் குண்டசாலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கெங்கல்ல கிராமத்தில் அமைந்துள்ள அங்கேதென்ன எஸ்டேட் மற்றும் அங்கேதென்ன எனும் அங்கந்துரேவத்த எஸ்டேட் எனும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. விஜேகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 28.10.2006 ஆந் திகதிய 531பீ ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள லொட் 1/166 எனும் இரு காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும். இது 16.91 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

இவ்வாதனம் குசலேந்திர ரத்நாயக்க என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் பேங்க் பீஎல்சீயிற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- கண்டி நகர மத்தியிலிருந்து குண்டசாலை ஊடக திகன பாதையில் கெங்கல்ல கடைத்தெரு வரை வந்து, வலதுபக்கமாக திரும்பி அம்பகொட்டே பாதைக்குள் பிரவேசித்து, சுமார் 800 மீற்றர் தூரம் சென்று, வலதுபக்கமாக திரும்பி விக்டோரியா ரேன்ஜ் வீட்டுத் தொகுதி பாதைக்கு பிரவேசித்து, சுமார் 850 மீற்றர் தூரம் விக்டோரியா ரேன்ஜ் கிளப் வரை வந்து, மீண்டும் வலதுபக்கமாக திரும்பி, சந்திக்கும் தார் பாதையூடாக சுமார் 100 மீற்றர் தூரம் செல்ல, இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2014, மார்ச்சு 31 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2013.11.29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும் 2013.11.15 ஆந் திகதிய "த ஐலண்ட்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாக செலுத்துதல் வேண்டும்.

கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து), பிரதேச சபை வரியும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் மற்றும் வரிகளும், ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை), நொத்தாரிசு கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ அலுவலகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- சிரேஷ்ட முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 70ஏ, கம்பளை வீதி, நாவலப்பிட்டி. தொலைபேசி இல. : 054-2223960, 054-2223961-2 ; பெக்ஸ் இல. : 054-2223963.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. :071-4755974, 071-8446374, 077-7761706.
தொலை/பெக்ஸ் இல. : 081-2210595.

3-365

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.